

தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் திருவெறும்பூர் தொகுதி பொய்கைக்குடி கிராமத்தில் வசிக்கும் மாணவி ஷாலினி, அருகே உள்ள தேனேரிப்பட்டி பள்ளியில் 11ஆம் வகுப்பு படித்து வருகிறார். பொதுத்தேர்வு நேரத்தில் இவரது தந்தை சண்முகம் இறந்துவிட்டார். இருப்பினும் அந்த துக்கத்தை மனதில் இருத்திக் கொண்டு மாணவி ஷாலினி பொதுத் தேர்வினை BHEL வளாக பள்ளி மையத்தில் எழுதினார். ஆசிரியர்களும் சக மாணவர்களும் அவருக்கு ஆறுதல் கூறி தேர்வை எழுத வைத்தனர். இந்த நிலையில் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாணவி ஷாலினியின் வீட்டுக்குச் சென்று அவருக்கு கல்வி உதவித்தொகையை வழங்கி, தந்தையின் மறைவுக்கு ஆறுதல் கூறினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.




ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க. கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற தொகுதி இளைஞர் அணி சார்பில் இந்தித் திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நம்பியூரில் ஒன்றிய கழக செயலாளர் மெடிக்கல் பி.செந்தில்குமார் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.திருவேங்கடம் வரவேற்பில் நடைபெற்றது. இதில் உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினார். கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம், சேலம் டி.மகேஷ், பி.ஏ.சீனிவாசன், கே.இ.பிரகாஷ் உள்ளிட்ட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு வடக்கு, தெற்கு, மத்திய மாவட்டத்தில்

# 37 இடங்களில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

ஈரோடு, ஏப். 2 -

ஈரோடு தெற்கு, வடக்கு, மத்திய மாவட்டத்தில் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் நிதி ரூ.4034 கோடியை வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து மொடக்குறிச்சி மேற்கு, மொடக்குறிச்சி கிழக்கு, சென்னிமலை, ஈரோடு, கொடுமுடி, கோபி, பெருந்துறை, டி.என்.பாளையம், நம்பியூர், சத்தியமங்கலம், அந்தியூர், பவானி, அம்மாபேட்டை ஆகிய ஒன்றியங்களில் 37 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

ஆர்ப்பாட்டத்தில் ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான தோப்பு என்.டி. வெங்கடாசலம், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக நெசவாளரணி செயலாளர்கள் எஸ்.எல்.டி.ப.சச்சி தானந்தம், சிந்து ரவிச்சந்திரன் ஒன்றிய கழக செயலாளர்கள் சு.குணசேகரன், பி. செங்கோட்டையன், வ.காதிர்வேல், கே.பி.சாமி, கே.பி.துரைராஜ், கே.ஏ. சேகர், சிறுலூர், எஸ்.ஏ. முருகன், எம்.சிவபாலன், மெடிக்கல் செந்தில்குமார், கே.சி.பி.இளங்கோ, கே.எஸ்.சரவணன், எம். ஈஸ்வரன், எஸ்.ஆர்.எஸ். செல்வம் சி.பிரபு, காயத்ரி இளங்கோ, என்.டி.பத்மநாபன், டாக்டர் விவேக், ஆர். பொன்னுசாமி, மாவட்ட கழக துணை செயலாளர் குருசாமி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.கோவிந்தராஜர், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### கோடை வெப்பம் தணிக்க, தமிழ்நாடெங்கும் தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்திடுக!

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கோடை வெயில் அதிகரித்துவரும் வேளையில், வெப்பத்தில் இருந்து மக்களைக் காக்கும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் என அனைத்துப் பகுதிகளிலும் தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்கும்படி, கழக நிர்வாகிகளுக்குக் கழகத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, நமது இளைஞர் அணியினரும் தமிழ்நாடெங்கும் சாலையோரங்கள், தெருமுனைகள், பேருந்து நிறுத்தங்கள், பள்ளி, கல்லூரிகள் அருகில் என்று, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படா வண்ணம், தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு அமைக்கப்படும் பந்தலில், மக்களின் தாகம் தணிக்கும்படி குடிநீர், நீர்மோர் ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 31-03-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 02.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | விராலிமலை | சின்னக் கடைவீதி, இலுப்பூர் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மு.செந்தூர் பாண்டி |
| 2 | 03.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | புதுக்கோட்டை | கடைவீதி, பெருங்களூர், புதுக்கோட்டை | எழுத்தாளர் வே.மதிமாறன், பேனா தெய்வம் |
| 3 | 04.04.2025 | சென்னை கிழக்கு | அம்பத்தூர் | யாதவாள் தெரு, பாடி, அம்பத்தூர் | இந்திரகுமார் தேரடி, அ.தஸ்னீம் பானு |
| 4 | 04.04.2025 | சென்னை கிழக்கு | திரு.வி.க நகர் | சந்திரயோகி சமாதி சாலை, மங்களபுரம் | மாண்புமிகு கோவி.செழியன், செ.ஜோதி காமாட்சிராஜன் |
| 5 | 04.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | திருவிடைமருதூர் | கதிராமங்கலம் கடைவீதி, திருவிடைமருதூர் | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், ரா.கருணாநிதி |
| 6 | 04.04.2025 | அணைக்கட்டு | வேலூர் | பேருந்து நிலையம், ஒடுகத்தூர் | திண்டுக்கல் ஐ.லியோனி, எம்.முகமது ஜபீர் |
| 7 | 05.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | கும்பகோணம் | சோழபுரம் கடைவீதி, கும்பகோணம் | நாஞ்சில் சம்பத், மு.காவியா |
| 8 | 05.04.2025 | கிருஷ்ணகிரி மேற்கு | வேப்பனஹள்ளி | சூளகிரி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சி.பவித்ரா |
| 9 | 05.04.2025 | திருவாரூர் | நன்னிலம் | கலைஞர் அரங்கம், மஞ்சக்குடி | கம்பம் செல்வேந்திரன், வீ.வேல்முருகன் |
| 10 | 05.04.2025 | திருச்சி வடக்கு | மண்ணச்சநல்லூர் | எதுமலை பிரிவு ரோடு | ராஜகம்பீரன் அப்பாஸ், ப.வெங்கடேஷ் |
| 11 | 05.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் | என்.ஜி.ஓ.காலனி, உழவர் சந்தை அருகில் | மதுரை எஸ்.பாலா, அ.சுஹாசினி |
| 12 | 06.04.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | பர்கூர் | பர்கூர் பேருந்து நிலையம் | நாஞ்சில் சம்பத், கு.முரளிகிருஷ்ணன் |
| 13 | 06.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை | மதுரை ரோடு, வத்தலகுண்டு | ராஜகம்பீரன் அப்பாஸ், துரை தினகரன் |
| 14 | 06.04.2025 | திருச்சி வடக்கு | துறையூர் | வடக்குத் தெரு, நால் ரோடு, ந.குணசீலன் தெரு | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், பு.ஹசீனா |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 31–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி